செ.வெ.எண்: 34 நாள்: 18.04.2020

பத்திரிக்கை செய்தி

144 தடை உத்தரவு அமலில் உள்ளதால் கட்டுமான தொழிலாளர்கள், அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு **தமிழக அரசு சிறப்பு நிவாரணமாக அறிவித்துள்ள உணவுப்பொருள் தொகுப்பு மற்றும் ரூ.1000 பெற** தகுதியானவர்கள் தொழிலாளர் நலத்துறை அலுவலரை அணுகலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன். இஆப., அவர்கள் தகவல்

அதன் விபரம் வருமாறு:

கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் வகையில் அரசின் உத்தரவின்படி 144 தடை உத்தரவு தற்போது அமலில் உள்ளதால், தமிழ்நாடு கட்டுமான தொழிலாள்கள் மற்றும் அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ளவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கு **15 கிலோ அரிசி , 1 கிலோ பருப்பு மற்றும் 1 கிலோ சமையல் எண்ணெய ஆகியவை** அடங்கிய சிறப்பு உணவுப்பொருள் தொகுப்பை நியாயவிலைக்கடைகள் மூலமாகவும், நிவாரணத்தொகையாக **ரூ.1000** தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் மூலம் அவரவர் வங்கிக்கணக்குகளிலும் வரவு வைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், கரூர் மாவட்டத்தில் கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 29,769 நபர்களில், 16,516 நபர்களின் பெயர், முகவரி, வங்கிக்கணக்கு எண், ஆதார் எண் உள்ளிட்ட தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளது.

மீதமுள்ள 13,253 நபர்களும் விரைவில் தங்களது பெயர், முகவரி, வங்கிக்கணக்கு எண், ஆதார் எண், நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்துள்ளதற்கான ஆதாரம் உள்ளிட்டவைகளை தொழிலாளர் உதவி ஆணையர் அலுவகத்திற்கு வாட்ஸ்அப் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

மேலும், நியாய விலைக்கடைகளில் நல வாரியத்தில் பதிவு செய்துள்ளதற்கான அட்டையை காட்டி சிறப்பு உணவுப்பொருள் தொகுப்பை பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு பெற்றுக்கொள்ளும்போதும் உங்களது பெயர், முகவரி, வங்கிக்கணக்கு எண், ஆதார் எண் ஆகியவற்றை கட்டாயம் வழங்க வேண்டும். நியாய விலைக்கடைகளில் பொருட்களை பெற்றுக்கொள்ளும்போது கட்டாயம் சமூக விலகலை கடைபிடிக்க வேண்டும்.

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ளவர்கள் மற்றும் பதிவு செய்து இதுநாள்வரை தங்களது ஆதார் அட்டை எண், குடும்ப அட்டை எண், வங்கிக்கணக்கு எண் ஆகியவற்றை தொழிலாளர் நல அலுவலகத்தில் வழங்கத்தவறிய நபர்கள் உங்களது விபரங்களை கீழ்கண்ட வழிகளில் தெரிவிக்கலாம்.

அலுவலக தொலைபேசி எண்: 04324 - 220330
வாட்ஸ்அப் எண் மற்றும் செல்பேசி எண்: 8508178917, 9442519701
மின்னஞ்சல் முகவரி : lossskrr@gmail.com

ஏற்கனவே, தகவல் தெரிவித்தவர்கள் மீண்டும் தெரிவிக்கத்தேவையில்லை. 144 தடை உத்தரவு அமலில் உள்ளதால் தொழிலாளர் நல அலுவலகத்திற்கு யாரும் நேரில் வரத்தேவையில்லை. மேற்சொன்ன வழிமுறைகளில் தங்களது வங்கிக்கணக்கு உள்ளிட்ட விவரங்களை தெரிவித்தால்தான் நிவாரணத்தொகையினை தங்களது கணக்கில் வரவு வைக்க இயலும். எனவே, தகுதியுள்ள அனைவரும் தங்களது தகவல்களை உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.